# Flagship Schemes

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## தமிழ்நாடு அரசு

அருள் IAS அகாடமி
ஆல்வின் காம்ப்ளக்ஸ், 2வது தளம், ஜவஹர் பஜார், கரூர் –1.

# கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம்

தமிழ்நாடு அரசு, நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் அடிப்படை கட்டமைப்பில் உள்ள இடைவெளியினை நிரப்பும் பொருட்டு, உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் மற்றும் புனரமைத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு, 138 நகராட்சிகள், 490 பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளாக இருந்து புதிதாக மாநகராட்சிகளாக உருவாக்கப்பட்ட 6 மாநகராட்சிகள் ஆகியவற்றிற்கு ஆண்டுதோறும் ரூ. 1000 கோடி நிதி ஒதுக்கீட்டில் "கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டத்தை" துவக்கியுள்ளது. ஒவ்வொரு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பிலும் அடிப்படை கட்டமைப்பிற்கான தேவைகள் கண்டறியப்பட்டு குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி, சாலைகள் மேம்படுத்துதல், சமுதாய மேம்பாட்டிற்கான அறிவுசார் மையம் அமைத்தல், சந்தைகள் மேம்படுத்துதல்,. பேருந்து நிலையங்கள் மேம்படுத்துதல் போன்ற பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

### நகராட்சிகள்

- 2021-2022-ம் நிதி ஆண்டில் ரூ. 558.88 கோடி மதிப்பீட்டில் 586 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 365 பணிகள் முடிவுற்று பிற பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.
- 2022-2023-ம் நிதி ஆண்டில் ரூ.582.19 கோடி மதிப்பீட்டில் 453 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 17 பணிகள் முடிவுற்று பிற பணிகள் பல்வேறு முன்னேற்ற நிலைகளில் உள்ளன.

### பேரூராட்சிகள்

- 2021-22-ம் நிதி ஆண்டில் ரூ. 473.42 கோடி மதிப்பீட்டில் 800 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 700 பணிகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் முடிவுபெறும் நிலையில் உள்ளன.
- 2022-23-ம் நிதி ஆண்டில் அம்ரூத் பங்கு தொகையையும் சேர்த்து ரூ.466.19 கோடி மதிப்பீட்டில் 291 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.



ARUL IAS ACADEMY

# நமக்கு நாமே திட்டம் (நகர்ப்புரம்)

தமிழ்நாடு அரசு, சமுதாய உட்கட்டமைப்புகளை உருவாக்குவதிலும், பராமரிப்பதிலும் பொதுமக்களின் பங்கேற்பினை அதிகரிக்கும் நோக்கத்துடன் நமக்கு நாமே திட்டத்தை 2021–ஆம் ஆண்டு முதல் நகர்ப்புரத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், நகர்ப்புர உள்ளாட்சிகளில் நீர்நிலைகளை சீரமைத்தல், பூங்காக்கள் நிறுவுதல், மேம்பாடு செய்தல் மற்றும் சீரமைத்தல், விளையாட்டுத் திடல்கள், தெருவிளக்குகள் அமைத்தல், கண்காணிப்பு கேமராக்கள் நிறுவுதல், பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், நகர்ப்புர ஆரம்ப சுகாதாரமையங்கள், வணிக வளாகங்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கான புதிய கட்டடம் கட்டுதல் மற்றும் சீரமைத்தல், பொது நூலகங்கள் மற்றும் அறிவுசார் மையங்கள் அமைத்தல், புதிய எரிவாயு தகனமேடைகள், மழைநீர் வடிகால்கள், சாலைகள், பொது மற்றும் சமுதாயக் கழிப்பறைகள் கட்டுதல், சந்தைகள் அமைத்தல் போன்ற உட்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது, திடக்கழிவுமேலாண்மைக்குப் பயன்படும் வாகனங்கள் கொள்முதல் செய்யவும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | நகர்ப்புர உள்ளாட்சிகள் | நிதி ஒதுக்கீடு (ரூ. கோடியில்) | |
|---|---|---|---|
| | | 2021–2022 | 2022–2023 |
| 1. | பெருநகர சென்னை மாநகராட்சி | 24.85 | 33.17 |
| 2. | பிற மாநகராட்சிகள் | 34.93 | 69.07 |
| 3. | நகராட்சிகள் | 53.07 | 54.52 |
| 4. | பேரூராட்சிகள் | 37.15 | 43.24 |
| | **மொத்தம்** | **150.00** | **200.00** |

# நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டம்

நகர்ப்புர ஏழைகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் நகர்ப்புர வேலை வாய்ப்புத் திட்டம், பெருநகர சென்னை மாநகராட்சியில் இரண்டு மண்டலங்களிலும், ஏனைய 14 மாநகராட்சிகளில் தலா ஒரு மண்டலத்திலும், 7 நகராட்சி நிர்வாக மண்டலங்களில் தலா ஒரு நகராட்சி என 7 நகராட்சிகளிலும், 37 மாவட்டங்களில் தலா ஒரு பேரூராட்சி வீதம் 37 பேரூராட்சிகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 2,04,860 நபர்களுக்கு வேலைக்கான அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. 2021–2022 ஆம் நிதி ஆண்டிற்கு ரூ.75.00 கோடி பெறப்பட்டுள்ளது.

- பெருநகர சென்னை மாநகராட்சி – ரூ.2.14 கோடி மதிப்பீட்டில் 31 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 16 பணிகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.
- பிறமாநகராட்சி மற்றும் நகராட்சிகள் – ரூ.28.72 கோடி மதிப்பீட்டில் 208 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 76 பணிகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.
- பேரூராட்சிகள் ரூ.27.74 கோடி மதிப்பீட்டில் 192 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 72 பணிகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.
- 2022–2023 ஆம் நிதி ஆண்டிற்கு ரூ.25.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதனைத் தொடர்ந்து அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- முன்னோட்டமாக செயல்படுத்தப்பட்டுவரும் நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டத்திலுள்ள இடையூறுகளைக் கண்டறிய மாநில வளர்ச்சி கொள்கைக் குழுவால் மதிப்பீட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இடைக்கால அறிக்கை பெறப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்துவது அவசியத்தேவை என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

# தூய்மை இந்தியா திட்டம் (நகர்ப்புரம்) 2.0

தூய்மை இந்தியா திட்டமானது அனைத்து நகரங்களிலும் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத நிலையினை ஏற்படுத்துவது, கசடு கழிவு அல்லது கழிவுநீர் சுத்திகரிப்பு மேலாண்மையினை உறுதி செய்தல் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நீரின் அதிகபட்ச பயன்பாட்டினை உறுதி செய்தல், அனைத்து நகரங்களையும் தூய்மையான மற்றும் குப்பை இல்லா நகரமாக மாற்றுவதுடன். 100% திடக்கழிவுகளை அறிவியல் முறையில் செயலாக்கம் செய்தல் திடக்கழிவுகள் உருவாகும் இடத்திலேயே தரம் பிரித்தல், கட்டுமானம் மற்றும் கட்டட இடிபாட்டுக் கழிவுகள் ஆகியவற்றை திறம்பட மேலாண்மை செய்தல், நெகிழி கழிவு மேலாண்மை மற்றும் அனைத்து தேக்கத் திடக் கழிவுகள் கொட்டும் இடங்களையும் மீட்டெடுத்தல் தகவல் கல்வி தொடர்பு விழிப்புணர்வு உருவாக்குதல், திறன்மேம்பாடு உருவாக்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது.

உள்ளாட்சிகளில் நகர சுகாதார செயல்திட்டம் மற்றும் நகர திடக்கழிவு மேலாண்மை செயல்திட்டம் தயாரிக்கப்பட்டு மாநில உயர்மட்டக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

# அம்ரூத் –2.0

அடல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் 2.0 ஒன்றிய அரசால் 01.10.2021 அன்று தொடங்கப்பட்டது. அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டிலுள்ள 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 490 பேரூராட்சிகள் உள்ளிட்ட அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளும் பயன் பெறும்.

அம்ரூத் 2.0 ன் முக்கிய நோக்கமானது, நகரப்பகுதிகளில் 100% முழுமையான நீர் ஆதார பாதுகாப்பினை உறுதி செய்வது மற்றும் அனைத்து வீடுகளுக்கும் செயல்படக்கூடிய வீட்டு குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவதாகும். இந்நோக்கமானது, நீர் ஆதார பாதுகாப்பு. நீர்நிலைகள் மற்றும் கிணறுகளை புனரமைத்தல், சுத்திகரிக்கப்பட்ட நீரை மறுசுழற்சி / மறுபயன்பாடு செய்தல் மற்றும் மழைநீர் சேகரிப்பு போன்றவற்றின் வாயிலாக பொதுமக்களின் பங்களிப்போடு எய்தப்படும்.

அம்ரூத் 2.0ன் முக்கிய கூறுகள் (1) அனைவருக்கும் குடிநீர் வழங்கல், (2) கழிவுநீர், கசடுநீர் மேலாண்மை, பயன்படுத்தப்பட்ட நீரின் மறுசுழற்சி/மறுபயன்பாடு, நீர்நிலைகளை புனரமைத்தல் (நகர்ப்புர ஈரநிலம் உட்பட) மற்றும் பசுமை வெளிகளை உருவாக்குதல்.

### நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள்

- 2021–2022–ம் நிதி ஆண்டில் ரூ.2,854.70 கோடி மதிப்பீட்டில் 154 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, பல்வேறு நிலைகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
- 2022–2023–ம் நிதி ஆண்டில் ரூ.6.404.18 கோடி மதிப்பீட்டில் 585 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, பல்வேறு முன்னேற்ற நிலைகளில் உள்ளன.

# அம்ருத்

அட்டல் புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டத்தின் நோக்கமானது. குடிநீர் வழங்குதல், கழிவு நீர் மற்றும் கசடு கழிவு மேலாண்மை. மழை நீர் வடிகால், மோட்டார் சாராத வாகன போக்குவரத்து, பூங்காக்கள் மற்றும் பசுமை பகுதிகள் போன்ற உட்கட்டமைப்புகள் நிறுவப்படுவதை உறுதிப்படுத்துதல் போன்றவையாகும். இத்திட்டத்தின் கீழ், ஒரு இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகை கொண்ட நகரங்கள், சமய மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த நகரங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் ஒரு இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகை கொண்ட 26 நகரங்கள், சமய மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த 2 நகரங்கள் என, மொத்தம் 28 நகரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 27 மாநகராட்சி / நகராட்சி / பேரூராட்சிகளில் (பெருநகர சென்னை மாநகராட்சி நீங்கலாக) இதுவரை ரூ. 11,441.41 கோடி மதிப்பீட்டில் 445 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 423 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 22 பணிகள் வெவ்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.



ARUL IAS ACADEMY

# சீர்மிகு நகர திட்டம்

சீர்மிகு நகரங்கள் திட்டமானது மக்களின் உயர்ந்த வாழ்க்கை தரத்திற்கான உட்கட்டமைப்பு. சுத்தமான மற்றும் நீடித்த நிலையான சுற்றுச்சூழல் மற்றும் சீர்மிகு தீர்வுகள் வழங்குதல் போன்ற நோக்கத்துடன் 2015–ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், தஞ்சாவூர், வேலூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருப்பூர், திருச்சிராப்பள்ளி மற்றும் ஈரோடு ஆகிய 11 மாநகராட்சிகளில் சீர்மிகு நகரத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**நிதி ஒதுக்கீடு:**

- இத்திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட 11 மாநகராட்சிகளில் ஒவ்வொரு மாநகராட்சிக்கும் ரூ. 1000 கோடி நிதி ஒதுக்கீடு என்ற அடிப்படையில் ரூ.10,797.89 கோடி மதிப்பிலான 684 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 509 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் வெவ்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.
- சீர்மிகு நகரங்கள் திட்டக் காலம், தற்போது 2023–ஆம் ஆண்டு ஜீன் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

# TNPSC குரூப் 4

6,244 காலியிடங்கள்

**2024 புதிய வகுப்புகளுக்கான அட்மிஷன் நடைபெறுகிறது**




## புதிய வகுப்புகள் ஆரம்பம்...

### சிறப்பம்சங்கள்

- அனுபவமிக்க ஆசிரியர்கள்
- மாணவர்கள் மீது தனிப்பட்ட கவனம்
- தினசரி மற்றும் வார இறுதி பயிற்சி தேர்வுகள்
- Answer Key Discussion Class
- Library & Study Hall Facility
- Wi-Fi Facility

பயிற்சி வகுப்புகள்

பயிற்சி தேர்வுகள்

**தொடர்புக்கு**

7904 7606 94

8610 6917 30

**Date of Exam: 09/06/24**

Total Vacancies: 6244

Last Date To Apply: 28/02/24

ADMISSION OPEN

தினசரி, வார இறுதி வகுப்புகள்

# அருள் IAS அகாடமி

ஆல்வின் காம்ப்ளக்ஸ், 2வது தளம், ஜவஹர் பஜார், கரூர் –1.